//பாதுகாப்பான முறையில்//

# தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

நி.மு.எண். 5172 அ1 / 2023 நாள் ○1 .09.2023

---

பொருள் தமிழ்நாடு அமைச்சுப் பணி – பணிவரன்முறை– திரு. சி. தீர்ப்பு, இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, கெட்டுஅள்ளி, தருமபுரி மாவட்டம் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரியது – சார்பாக.

பார்வை
1. சென்னை – 3 தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு செயாளரின் கடிதம் எண் 2563/PSD-I2/2020 நாள் 21.07.2020
2. தருமபுரி மாவட்ட முதன்மைக் அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 3655/அ1/2020 நாள் 17.09.2020.
3. அரசாணை எண் 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு) துறை நாள் 18.05.2018
4. அரசாணை எண் 151 பள்ளிக் கல்வி (ப.க.1 (1) த்துறை நாள் 09.06.2022
5. தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, கெட்டுஅள்ளி கடிதம் ந.க.எண்.49/2023 நாள் 16.08..2023

பார்வை (1)–ல் கண்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி, 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டில் நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு (Group-IV) நியமனம் செய்ய தேர்வு செய்யப்பட்டு பார்வை (2) இல் கண்ட தருமபுரி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின் படி தருமபுரி மாவட்டம், கெட்டுஅள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிநியமன ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து 21.09.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. சி. தீர்ப்பு என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்திட கோரிய கருத்துரு பார்வை (5) இல் கண்டவாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் பரிந்துரை செய்து பணிந்தனுப்பியுள்ளார்.

மேற்கண்ட கருத்துருவிணை கூர்ந்தாய்வு செய்து சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரின் பரிந்துரையின் அடிப்படையிலும், பார்வை (4) இல் கண்ட அரசாணையில் இளநிலை உதவியாளருக்கான நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என தெரிவிக்கப் பட்டுள்ளதாலும், கலம் 2ல் கண்ட பணியாளருக்கு கீழ்கண்ட நிபந்தனையின் பேரில் கலம் 4ல் கண்ட நாளில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | திரு. சி. தீர்ப்பு, இளநிலை உதவியாளர் அரசு உயர்நிலைப்பள்ளி, கெட்டுஅள்ளி, தருமபுரி மாவட்டம் | 21.09.2020 முற்பகல் | 21.09.2020 முற்பகல் |

சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள 2013–2014, தொகுதி IV ன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டு இந்த பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டுக் காலம் தகுதிக்காண் பருவ காலமாக நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தகுதிகாண் பருவகாலத்தில் வரையறுக்கப்பட்ட மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வினையும், இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியினையும் (பவானிசாகர் பயிற்சி) முடித்தல் வேண்டும். தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை பெறப்பட்ட பின்னரே இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்க வேண்டும்.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரங்களை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

பணியாளரின் சார்பாக பெறப்பட்ட பணிப்பதிவேடு அசல் ஒரு பைண்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலை அனுப்பி வைத்திட சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – பணிப்பதிவேடு அசல் ஒரு பைண்டு

1.9.23

முதன்மைக் கல்வி அலுவலர்,
தருமபுரி

01/09/23

பெறுதல் – தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, கெட்டுஅள்ளி, தருமபுரி மாவட்டம்

நகல் – திரு. சி. தீர்ப்பு, இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, கெட்டுஅள்ளி, தருமபுரி மாவட்டம்